அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 253/2015
தேதி. 14.10.2015

# ஏ.பி.ஜே.அப்துல்கலாம் பிறந்தநாள்
# ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ வாழ்த்து.

*மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர், பாரத ரத்னா ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் பிறந்தநாள் நம் அனைவராலும் மனமுவந்து நினைந்து கொண்டாடப்படுகிறது. மாபெரும் அணு சக்தி விஞ்ஞானியாகவும், இந்திய குடியரசுத் தலைவராகவும் திகழ்ந்த அப்துல்கலாம் அவர்கள் மனித நேயமிக்க மாமனிதராகவும், இளைஞர்கள் நலனில் அக்கரை கொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாகவும், உந்து சக்தியாகவும் திகழ்ந்தவர். இந்தியா மாபெரும் வல்லரசாக உருமாற வேண்டும் என்னும் லட்சியத்தை, நம்பிக்கையை ஒவ்வொருநாளும் விதைத்துக் கொண்டிருந்தவர். அத்தகைய ஆற்றல் மிக்க மாமனிதரின் பிறந்த நாளை தேசம் முழுவதும் தமிழ் இனத்தவர்களின் பெருமை மிகு அடையாளமாக திகழ்ந்த அப்துல்கலாம் அவர்களை அவரது பிறந்தநாளான இன்று போற்றி மகிழ்ந்து அவர் போதித்த லட்சியப் பயணத்தை தொடர்வதே அன்னாருக்கு பெருமை சேர்ப்பதாக அமையும்.*

*நன்றி, வணக்கம்,*
*உழைப்பவரே உயர்ந்தவர்,*
*என்றும் அன்புடன்,*

*ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,*
*தலைவர்.*